நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்
14 JUL 2008
சென்னை-600 005

சுருக்கம்

நகராட்சி நிர்வாகம் - மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் புதிய நவீன மின் மயானம் மற்றும் எரிவாயு மயானம் அமைக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதல் - புதிய நிபந்தனைகள் விதித்தல் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கும், பேரூராட்சிகளின் ஆணையாளருக்கும், சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கும் அதிகாரம் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசாணை (நிலை) எண். 122 நாள்: 27.06.2008

படிக்க:

அரசு கடிதம் எண்.9252/நநி3/2004-3, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22.11.2004.

---

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் பிற்சேர்க்கையாக பொதுவான 30 நிபந்தனைகளை குறிப்பிட்டு அவற்றை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் மட்டுமே நகராட்சி / மாநகராட்சிகளில் புதிய நவீன மின் மயானம் / எரிவாயு மயானங்களை, தனியார் அறக்கட்டளை / தனியார் நிறுவனங்கள் நிறுவுவதற்கு அரசின் அனுமதி கோரும் கருத்துருக்களை இனி வருங்காலங்களில் அரசுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று நகராட்சி நிர்வாக ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். மேலும் மேற்சொன்ன நிபந்தனைகளை புதிய மற்றும் குத்தகை புதுப்பிக்கும் நேர்வுகளுக்கும் பொருந்தச் செய்யவும், ஏற்கனவே மின் மயானம் அனுமதிக்கப்பட்டுள்ள நேர்வுகளிலும் இந்த நிபந்தனைகளை பொருந்த செய்யலாம் எனவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்பட்டிருந்தார்.

2. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தனியார் அறக்கட்டளை மற்றும் நிறுவனங்கள், புதிய நவீன மின் மற்றும் எரிவாயு மயானங்கள் அமைக்க அனுமதி கோரி வரும் கோரிக்கைகள் ஒவ்வொரு முறையும் சென்னை மாநகராட்சி ஆணையர்/ நகராட்சி நிர்வாக ஆணையர்/ பேரூராட்சி ஆணையரிடமிருந்து பெறப்பட்டு தனித்தனியே அரசால் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு ஒவ்வொரு நேர்விலும் அரசுக்குக் கருத்துரு அனுப்பி அதனை அரசு பரிசீலித்து தனித்தனியே ஆணைகள் வெளியிடுவதை தவிர்க்கலாம் எனவும், அத்துடன் பொதுவான நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கும் பொறுப்பை சென்னை மாநகராட்சி ஆணையர்/நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையர், ஆகியோருக்குப் பகிர்ந்தளிக்கலாம் எனவும் கருதப்படுகிறது. மேலும் இந்திய அரசியலமைப்பு சட்ட 74-ஆவது திருத்தத்தின்படி மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் 18

2

முக்கிய கடமைகளில் இந்தச் சேவையும் ஒன்றாகக் கட்டளையிட்டிருப்பதாலும், இந்தச் சேவையை மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சிகள் சிறப்பான முறையில் செய்திடத் தேவையான கூடுதல் செலவினத்தை ஏற்றுக் கொள்ள பெரும்பாலான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் இயலாத சூழ்நிலை உள்ளதாலும் மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சி சார்பாக இச்சேவையை செய்ய முன் வரும் அறக்கட்டளைகளையும் தனியார் நிறுவனங்களையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கில் மேலே படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் நிர்ணயித்துள்ள 30 பொதுவான நிபந்தனைகளை மறு பரிசீலனை செய்யலாம் என அரசு கருதுகிறது.

3. எனவே, மேலே படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் நகராட்சி / மாநகராட்சிகளில் புதிய நவீன மின் மயானம் / எரிவாயு மயானங்களை, தனியார் அறக்கட்டளை / தனியார் நிறுவனங்கள் நிறுவுவதற்கு அரசின் அனுமதி கோரும் கருத்துருக்களை பரிசீலிக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் ரத்து செய்யப்படுகிறது.

4. இவ்வாணையின் பிற்சேர்க்கையாக குறிப்பிடப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு மாநகராட்சி/ நகராட்சி/ பேரூராட்சிகளில் புதிய நவீன மின் மற்றும் எரி வாயு மயானம் அமைக்க தனியார் அறக்கட்டளை / தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தை, இனி வருங்காலங்களில் அனைத்து நகராட்சிகள் /மாநகராட்சிகளைப் பொறுத்த மட்டிலும் (சென்னை மாநகராட்சி நீங்கலாக) நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் பேரூராட்சிகளைப் பொறுத்தவரை பேரூராட்சிகள் ஆணையருக்கும் சென்னை மாநகராட்சியை பொறுத்த மட்டிலும் அதன் ஆணையாளருக்கும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலும் மயானம் அமைப்பது தொடர்பாக இதற்கு முன், அனுமதி வழங்கப்பட்ட இனங்களில் அனுமதி காலம் முடிந்தபின் புதிய நிபந்தனைகளை மட்டுமே விதித்து அனுமதி வழங்கலாம் எனவும் ஆணையிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
பேரூராட்சிகளின் ஆணையர், குறளகம், சென்னை –108.
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையாளர்கள்
(நகராட்சி நிர்வாக ஆணையரின் மூலம்.)
அனைத்து பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள்.
(பேரூராட்சிகளின் ஆணையர் மூலமாக)

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.1 / மாந.2 / மாந.6 / பேரூ.2 மற்றும்
அந.2) துறை, சென்னை–9.
இ.கோ./ உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

<u>பிற்சேர்க்கை</u>

<u>மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் புதிய நவீன மின் மயானம் மற்றும் எரிவாயு மயானம் அமைக்க தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவது குறித்த நிபந்தனைகள்.</u>

1) மின்சார / எரிவாயு மயானம் அமைக்க மாநகராட்சி / நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் நிலத்தை குத்தகைக்குத் தருவதை தவிர்த்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மயானங்களில், நவீன தகன மேடை அமைக்க அனுமதி வழங்க வேண்டும். கட்டப்படும் நவீன தகன மேடை உள்ளாட்சி அமைப்புகளின் சொத்தாக இருக்க வேண்டும். மேலும், அமைக்கப்பட்ட நவீன தகன மேடையின் பராமரிப்பு உரிமம் தனியார் அறக்கட்டளை / நிறுவனத்திற்கு வழங்க வேண்டும்.

2) முதன்முதலில் பராமரிப்பு பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து பத்து வருட காலத்திற்கு மட்டுமே மின்/எரிவாயு மயான பராமரிப்பை அறக்கட்டளை / நிறுவனம் ஏற்றுக் கொள்ள அனுமதிக்கப்படும். கால நீட்டிப்பு தேவைப்படின் மூன்று மாத காலத்திற்கு முன்பாகவே சம்பந்தப்பட்ட அறக்கட்டளைகள் / நிறுவனங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தினை பரிசீலித்து நவீன தகன மேடையினை பராமரிக்கும் உரிமத்தை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் புதுப்பித்து/நிராகரித்து ஆணை பிறப்பிக்க வேண்டும்.

3) பத்து ஆண்டுகளுக்கு மேல் குத்தகையை புதுப்பிப்பதும், அனுமதி மறுப்பதும் மன்றம் மற்றும் அனுமதி அளிக்கும் அலுவலரின் முடிவைப் பொறுத்தது. அனுமதி மறுக்கப்பட்டால் குத்தகைக்குரிய சொத்தை எந்தவித இழப்பீடும் கோராமல் மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிக்குத் திரும்ப ஒப்படைக்க வேண்டும். அனுமதியளிக்கப்பட்ட 10 ஆண்டு காலத்திற்குள் பொது நலன் கருதி தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் நிலம் மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சிக்குத் தேவைப்பட்டால், அப்போதுள்ள நிலையில் கட்டுமானத்துடன் அறக்கட்டளை/ நிறுவனம் நிலத்தை மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். இதற்காக இழப்பீடு ஏதும் தனியார் நிறுவனம் / அறக்கட்டளைக்கு வழங்கப்படமாட்டாது.

4) அனுமதி வழங்கும் போதே, தேவையான சாதன அமைப்புகளுக்கும் கட்டுமானங்களுக்கும் சேர்த்து மாநகராட்சி / நகராட்சி/ பேரூராட்சி அனுமதி வழங்கப்பட வேண்டும். அனுமதிக்கப்பட்ட கட்டுமானங்களுக்கு மேல், பின்னர் கூடுதல் கட்டுமானங்கள் எதுவும் தேவைப்படின், மாநகராட்சி / நகராட்சி/ பேரூராட்சி முன்அனுமதியின்றி செய்யக் கூடாது.

5) மாநகராட்சி / நகராட்சி/ பேரூராட்சி அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து 1 ½ வருடங்களுக்குள் அறக்கட்டளை / நிறுவனம் கட்டுமானம் மற்றும் இயந்திரங்கள் நிறுவி முழு அளவில் முடிக்கப்பட வேண்டும்.

6) குத்தகை நிலம் மயானக் காரியங்கள், இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர வேறு எந்தக் காரியங்களுக்கும் / நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தக் கூடாது . எந்த சட்ட விரோத நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற அனுமதிக்கக் கூடாது.

...2..

7) ஒலி, ஒளி பெருக்கிகளை அறக்கட்டளை / நிறுவனம் பயன்படுத்தக்கூடாது. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக, சென்னை மாநகராட்சி ஆணையர் / நகராட்சி நிர்வாக ஆணையர்/ பேரூராட்சிகளின் ஆணையர் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அறக்கட்டளை / நிறுவனம் கட்டுப்பட வேண்டும்.

8) குறைந்த பட்சம் பராமரிப்புக் காலம் பத்து ஆண்டுகள் என்பதை மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி திருத்த விருப்பப்பட்டால் மேலும் நீடித்துக் கொள்ளவோ அல்லது குறைத்துக் கொள்ளவோ அறக்கட்டளை / நிறுவனம் சம்மதம் தெரிவிக்க வேண்டும். அதே போன்று நிபந்தனைகளை மீறி அறக்கட்டளை / நிறுவன செயல்பாடு இருந்தால் உரிய விளக்கம் தர அவகாசம் கொடுத்து குத்தகையை ரத்து செய்யலாம்.

9) அறக்கட்டளை / நிறுவனத்தினர் பராமரிப்பை நிறுத்திக் கொள்ள விரும்பினால் மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிக்கு ஆறு மாத காலத்திற்கு முன்பே அறிவிப்பு முறையாக வழங்க வேண்டும். மேலும் நிலத்தில் உள்ள கட்டுமானங்கள், சாதன அமைப்புகள் முதலியவற்றை இழப்பீடு கோராமல் மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிக்கு திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

10) எரியூட்டப்படும் சடலத்திற்கான கட்டணத்தில் தனியார் / அறக்கட்டளை நிறுவனர், மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகையை இனி செலுத்த வேண்டாம். பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அவர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தொகையை இதற்கு தகுந்த வகையில் தனியார் / அறக்கட்டளை நிறுவனம் குறைத்துக் கொள்ள வேண்டும்.

11) மேற்படி இடத்திலுள்ள பொருட்கள் ஏதேனும் களவாடப் பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்க இயலாது.

12) எரியூட்டும் இயந்திர புகைப்போக்கிகள், புகை வெளியேறுவதால் சுற்றுப்புற சூழ்நிலைகளை பாதிக்காத வகையிலும் தக்க உயரத்திலும் மாசு கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளின்படி அமைக்கப்பட வேண்டும்.

13) மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி தேவைப்படுமென கருதும் பட்சத்தில், மேற்படி அனுமதி மற்றும் தடையில்லாச் சான்றை அறக்கட்டளை / நிறுவனம் மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிக்காக தனது சொந்தப் பொறுப்பில் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

14) நவீன மயானத்தினை பயன்படுத்துவோர்கள் செலுத்த வேண்டிய கட்டணத்தை மன்றத் தலைவர், ஆணையாளர் / செயல் அலுவலர், சுகாதாரப் பிரிவு அதிகாரி மற்றும் நிறுவனத்தை சார்ந்த ஒருவர் கொண்ட குழு ஒவ்வொரு வருடமும் நிர்ணயிக்கலாம். இக்கட்டணம், இலாப நோக்கமின்றி செலவுகளை சரிக்கட்டும் விதமாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

15) ஜாதி, மத இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது மின் / எரிவாயு மயானமாக பயன்படுத்திட வேண்டும்.

16) எரிவாயு மயானத்தைச் சுற்றி தோட்டம் அமைத்தல், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், காவல் அரண் அமைத்தல் மற்றும் மயானத்தைச் சுற்றி மதிற்சுவர் எழுப்புதல் ஆகிய செலவினங்களை தனியார் அறக்கட்டளை /நிறுவனம் ஏற்க வேண்டும்.

17) மின் / எரி வாயு மயானத்தில், அறக்கட்டளை / நிறுவனம் எந்தவித கூரை வேய்ந்த கட்டிடமோ அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் கொண்ட கூரையோ கண்டிப்பாக அமைக்கப்படக் கூடாது.

18) எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்டப் பிரச்சனைகளுக்கு நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும்.

19) மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தையும் சம்மதித்து ஒப்பந்தப் பத்திரம் மாநகராட்சி / நகராட்சிக்கு/பேரூராட்சிக்கு அறக்கட்டளை / நிறுவனம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

20) மின் / எரிவாயு மயானம் அமைக்க உரிமம் பெற்ற தனியார் நிறுவனம் / அறக்கட்டளை, இறந்தவரின் பெயர், எரிவாயு மயானம் பயன்படுத்தப்பட்ட நாள் மற்றும் நேரம், பெறப்பட்ட தொகை ஆகிய விபரங்கள் அடங்கிய பதிவேட்டினை பராமரிக்க வேண்டும்.

21) மேலே உள்ள நிபந்தனைகளில் எந்த ஒரு நிபந்தனையாவது மீறப்பட்டாலும் வழங்கப்பட்ட அனுமதி ரத்துசெய்யப்படும்.

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 4/7/08